மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை–திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8 ஆம் நாள், புதன்கிழமை,
இ.ம.எண்.1/2024
இன்
அ.வ.எண்.36/2023
––––

சுப்பையா கோனார் ...மனுதாரர்/உத்தேச கட்சி சேர்க்க கோரும் 4 ம்பிரதிவாதி

/எதிர்/

1) முருகலட்சுமி
2) தமிழக அரசு அதன் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம்
3) கோட்டாட்சியர், கோவில்பட்டி.
4) வட்டாட்சியர், கோவில்பட்டி. ...எதிர்மனுதாரர்கள்/வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள்

இம்மனுவானது 23.03.2026 அன்று என்முன்பு இறுதிவிசாரணைக்கு வரப்பெற்று மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மகேந்திரகுமார் அவர்கள் ஆஜராகியும், 1ம்எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவா அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.M.இராமச்சந்திரன் அவர்கள் ஆஜராகி, எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்தும், மனுதாரர் மற்றும் 1ம்எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை கேட்டு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

**1)** மனுதாரரை அசல் வழக்கில் 4ம்பிரதிவாதியாக சேர்த்து வழக்கை நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு ஆர்டர் 1 ரூல் 10 சி.பி.சி–யின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்–**

மனுதாரர் அசல் வழக்கில் கோரும் 4ம்பிரதிவாதி ஆவார். நாலாட்டின்புத்தூர் கிராமம் சர்வே எண்.114/7 ல் கட்டுப்பட்ட 70 செண்ட் நிலம்

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.08 16:28:04 +0530

மனுதாரரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நிலமாகும். அதற்கு அருகே உள்ள புறம்போக்கு சர்வே எண்.103 நிலத்தை மனுதாரரும், பொதுமக்களும் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள். அந்த நிலத்தை 2015ம் ஆண்டு வாக்கில் எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்ய முயன்றதால், மனுதாரரும், ஊர் பொதுமக்களும் கொடுத்த புகார் மனுவில் வருவாய்துறையினர் விசாரணை செய்து வரும் நிலையில், 2022ம் ஆண்டு மீண்டும் 1ம்எதிர்மனுதாரர் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி போட்டு அடைத்துவிட்டார். இதுகுறித்து மீண்டும் கொடுத்த புகாரின் பேரில் விசாரணை செய்த கோவில்பட்டி வட்டாட்சியர் தமது செயல்முறை ந.க.ஆ/8279/21, நாள் 03.10.2022 மூலம் ஷை ஆக்கிரமிப்புகளை எதிர்மனுதாரர் அகற்றிட வேண்டும் என உத்தரவிட்டார். 1ம்எதிர்மனுதாரர் ஷை ஆக்கிரமிப்பை அகற்றிகொள்ளவில்லை என்பதால், மனுதாரர் கனம் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக W.P.(MD)No.14967/2023 தாக்கல் செய்து, ரிட் மனுவை விசாரணை செய்த உயர்நீதிமன்றத்தில் கோவில்பட்டி வட்டாட்சியர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் இதே பிரச்சனை சம்பந்தமாக அ.வ.எண்.36/2023 என வருவாய்த்துறைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார். எனவே வழக்கில் இம்மனுதாரரை பிரதிவாதிகளில் ஒருவராக சேர்த்துக்கொண்டு வழக்கை நிலைநிறுத்தி கொள்ளுமாறு அறிவுறுத்தி கனம் உயர்நீதிமன்றம் கடந்த 14.07.2023 அன்று ரிட் மனுவில் நீதி செய்தது. அதன் பின்பே எதிர்மனுதாரர் உத்தேச பிரதிவாதிகளாகிய மனுதாரரையும், பிற பொதுமக்களையும் பிரதிவாதிகளாக சேர்க்காமல் அசல் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிய வந்தது என்றும், அசல் வழக்கில் மனுதாரரை பிரதிவாதியாக சேர்க்கப்படாவிட்டால் பிரதான பிரச்சனையை அறிய இயலாது என்றும், ஆகவே இம்மனுதாரரை அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்த்து மேல்நடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.08 16:28:10 +0530

**<u>3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

மனுதாரர்/கோரும் 4ம்பிரதிவாதி பிராது தபசில் சொத்தினை எக்காலத்திலும், எவ்விதத்திலும் அனுபவம் செய்திருக்கவில்லை. பிராது தபசில் சொத்துக்கும், மனுதாரர்/கோரும் 4ம்பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமோ, அனுபவமோ எக்காலத்திலும் கிடையாது. அசல் வழக்கு நிலுவையில் இருந்து வரும் விவரம் மனுதாரர்/கோரும் 4ம்பிரதிவாதிக்கு நன்கு தெரிந்துள்ள நிலையில் அதனை மறைத்து பொய்யான விவரங்கள் கண்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் W.P.(MD)No.14967/2023 ரிட் மனு தாக்கல் செய்துள்ளதில், அசல் வழக்கு குறித்து, 3ம்பிரதிவாதியான கோவில்பட்டி வட்டாட்சியர், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் எடுத்துக்கூறிய பின்னரே மனுதாரரின் ரிட் மனுவானது சிவில் நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் தேடிக்கொள்ளக்கோரி தள்ளுபடி செய்யப்பட்டது என்பது உண்மையாகும். அசல் வழக்கு குறித்து ஆரம்பம் முதலே மனுதாரருக்கு நன்கு தெரிந்துள்ள நிலையில் இதுநாள் வரை வெறுமனே பார்வையாளராக இருந்துவிட்டு தற்போது தவறான முறையில் ஆதாயம் பெற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தின் பேரில் காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளதால், மனுதாரரின் மனுவானது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**<u>4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை–</u>**

இம்மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரர்/கோரும் 4ம்பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடியதா?

**<u>5) நீதிமன்ற பரிசீலனை –</u>**

**5(1)** 1ம்எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கில் தபசில் சொத்துக்களை பொறுத்து 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.08 16:28:16 +0530

இம்மனுதாரரை அசல் வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்து, மனு அபிடவிட்டில் நாலாட்டின்புத்தூர் கிராமம் சர்வே எண்.114/7ல் கட்டுப்பட்ட 70 செண்ட் நிலம் இம்மனுதாரரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நிலமாகும். அதற்கு அருகே உள்ள புறம்போக்கு சர்வே எண்.103 நிலத்தை மனுதாரரும், ஊர் பொதுமக்களும் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள். அந்த நிலத்தை 2015ம் ஆண்டு வாக்கில் எதிர்மனுதாரர்/வாதி ஆக்கிரமிப்பு செய்ய முயன்றும், பின்னர் 2022ம் ஆண்டு அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்து கம்பிவேலி போட்டு அடைத்துவிட்டதால் மீண்டும் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை செய்த கோவில்பட்டி வட்டாட்சியர் தமது செயல்முறை ந.க.ஆ/8279/21 நாள்–03.10.2022 மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட்டுள்ள நிலையில், மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் இருந்து வந்ததால் இம்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக W.P.(MD).No.14967/2023 தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்ததில் கோவில்பட்டி வட்டாட்சியர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் இதே பிரச்சனை சம்பந்தமாக அ.வ.எண்.36/2023 வருவாய்த்துறைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளதால், இம்மனுதாரரை ஷை வழக்கில் பிரதிவாதியாக சேர்த்து வழக்கை நிலைநிறுத்திகொள்ளுமாறு அறிவுறுத்தி ரிட் மனுவானது 14.07.2023ல் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் தான் அசல் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிய வந்தது என்றும், ஆகவே இம்மனுதாரரை அசல் வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

**5(2)** 1ம்எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரையில் பிராது தபசில் சொத்துக்கும், மனுதாரருக்கும் எவ்வித சம்பந்தமோ, அனுபவமோ எக்காலத்திலும் கிடையாது என்றும், அசல் வழக்கு நிலுவையில் இருந்து வரும் விவரம் மனுதாரருக்கு நன்கு தெரிந்துள்ள நிலையில் அதனை மறைத்து மாண்புமிகு சென்னை

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.08 16:28:21 +0530

உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளதில் அசல் வழக்கு குறித்து 3ம்பிரதிவாதியான கோவில்பட்டி வட்டாட்சியர் எடுத்துக்கூறிய பின்னரே மனுதாரின் ரிட் மனு சிவில் நீதிமன்றத்தின் மூலம் நிவாரணம் தேடிக்கொள்ளக்கோரி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்பதே உண்மை. மனுதாரரின் மனு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**5(3)** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கில் எழுவினா வனையப்பட்டு, வாதி தரப்பு விசாரணைக்காக இருந்து வரும் நிலையில், இம்மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டியுள்ளார். இம்மனுதாரரும், பிற பொதுமக்களும் புறம்போக்கு சர்வே எண்.103 நிலத்தை பாதையாக பயன்படுத்தி வருவதை 1ம்எதிர்மனுதாரர்/வாதி 2022ம் ஆண்டு ஆக்கிரமிப்பு செய்து கம்பி வேலி போட்டு அடைத்துவிட்டதால், புகார் கொடுக்கப்பட்டு விசாரணை செய்து, ஷை ஆக்கிரமிப்புகளை அகற்ற 03.10.2022ல் ந.க.ஆ/8279/21 மூலம் உத்தரவிடப்பட்டும், ஆக்கிரமிப்பை அகற்றாமல் இருந்து வந்த காரணத்தினால் இம்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்ததில், இதே பிரச்சனை தொடர்பாக இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.36/2023 வழக்கு நிலுவையில் உள்ளதால் அந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு தனது தரப்பு நியாயத்தை நிலைநாட்டிக்கொள்ள உரிமை உண்டு என்று ரிட் மனுவில் கூறியிருப்பதை கருத்தில்கொண்டு மனுதாரரின் மனுவை அனுமதிப்பது தான் சட்டப்படியும், நியாயப்படியும் உகந்தது என்று முடிவு செய்து மனுதாரரின் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**6) இறுதியாக,** மனுதாரின் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

KARUPPASAMY

Digitally signed by KARUPPASAMY
Date: 2026.04.08 16:28:27 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 08.04.2026 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.08 16:28:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

**மனுதாரர் தரப்பு சாட்சி –** இல்லை.
**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –** இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி –** இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் –** இல்லை.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.04.08 16:28:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மா.உ.நீ., கோவில்பட்டி.
இ.ம.எண்.1/2024
இன்
அ.வ.எண்.36/2023
வரைவு/நேரிய/ உத்தரவு
நாள்– 08.04.2026